**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 59/2016**

**Prosecution witness : அ.சா. 13** **Date : 11.03.2026.**

| | |
|---|---|
| **Name : மகேந்திரன்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused others absent. Petition filed and allowed) A6, A7, A11 died.**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் தற்போது மேச்சேரி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2, மேட்டூர் அவர்கள் நீதிமன்றத்தின் D.No.153/2026, நாள்.09.03.2026 சம்மன் உத்தரவின் பேரில் நீதிமன்றத்தில் மேச்சேரி காவல் நிலைய குற்ற எண்.361/2015 வழக்கில் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்க ஆஜரானேன்.

2) இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரி அருள்முருகன் ஆவார். அவர் காவல் துறையில் பணிநீக்கம் செய்யப்பட்டார். முதல் புலன் விசாரணை அதிகாரி காவல் ஆய்வாளர் சண்முகசுந்தரம் செய்துள்ளார். அவர் தற்போது காவல் துணை கண்காணிப்பாளராக பணியிலிருந்து சிவகங்கை மாவட்டம், திருபுவனம் காவல் நிலைய குற்ற வழக்கில் சம்மந்தப்பட்டு தற்காலிகமாக பணிநீக்கம் செய்யப்பட்டு அவர் இருக்கும் இடம் சரியாக கண்டறிய இயலவில்லை. அவர் கடந்த 07.02.2025ம் தேதி Video Conference வாயிலாக சாட்சியம் அளித்துள்ளார். அவ்வாறு சாட்சியம் அளித்த போது இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரி அருள்முருகன் என்பவர் மாண்பமை நீதிமன்ற நடுவர் ஓமலூர் அவர்கள் சேலம் மத்திய சிறைக்கு சென்று இவ்வழக்கில் அடையாள அணிவகுப்பு நடத்துவதற்கு உதவியாக இவ்வழக்கின் வாதி மற்றும் அவரது கணவரை மாண்பமை நீதிமன்ற நடுவர் அவர்களிடம் ஆஜர் படுத்தியுள்ளார்.

3) அடையாள அணிவகுப்பு முடிந்து அதன் அறிக்கையை நீதித்துறை நடுவர் ஓமலூர் அவர்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். அடையாள அணிவகுப்பு அறிக்கை **அ.சா.ஆ.27** ஆகும். அடையாள அணிவகுப்பு அறிக்கையுடன் இணைந்த அடையாள அணிவகுப்பு நடத்த வேண்டி மேச்சேரி காவல் ஆய்வாளர் அளித்த 15.05.2015 தேதியிட்ட வேண்டுகோள் கடிதம் **அ.சா.ஆ.28** ஆகும்.

4) இந்த வழக்கில் புலன் விசாரணை மேற்கொண்ட காவல் ஆய்வாளர் 01.05.2015 ம் தேதி எதிரிகள் சிவா, கிருஷ்ணமூர்த்தி இருவரையும் கைது செய்து பகல் 12.30 மணிக்கு எதிரி கிருஷ்ணமூர்த்தி என்பவரை விசாரித்த போது எதிரி தானாக முன் வந்து சாட்சிகள் சிவகுமார், கிராம நிர்வாக அலுவலர், பி.என்.பட்டி கிராமம், அம்மாசி, த/பெ.மாரிமுத்து, கிராம உதவியாளர், பி.என்.பட்டி கிராமம் ஆகியோர் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துள்ளார். அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.29** ஆகும். 01.05.2015 ம் தேதி எதிரிகள் சிவா, கிருஷ்ணமூர்த்தி இருவரையும் கைது செய்து பகல் 11.00 மணிக்கு எதிரி சிவா, த/பெ.குபேரன் என்பவரை விசாரித்த போது எதிரி தானாக முன் வந்து சாட்சிகள் சிவகுமார், கிராம நிர்வாக அலுவலர், பி.என்.பட்டி கிராமம், அம்மாசி, த/பெ.மாரிமுத்து, கிராம உதவியாளர், பி.என்.பட்டி கிராமம் ஆகியோர் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துள்ளார். அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.30** ஆகும்.

5) 01.05.2015 ம் தேதி மேச்சேரி காவல் நிலைய குற்ற எண்.361/2015 வழக்கில் பிற்பகல் 2.15 மணிக்கு எதிரிகள் சாதிக்பாஷா, செந்தில்குமார், சுரேஷ்குமார், ஆறுமுகம், ரமேஷ்குமார் ஆகியோர்களை கைது செய்துள்ளார். அன்று மாலை 04.30 மணிக்கு எதிரி ரமேஷ்குமார் என்பவரை சாட்சிகள் சந்தோஷ்குமார், அர்த்தனாரி ஆகியோர்கள் முன்னிலையில் விசாரித்த போது அவர் தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

6) சிவா, கிருஷ்ணமூர்த்தி, சங்கர் என்கிற ஞானசேகர், சௌந்தர்ராஜன் ஆகிய நால்வருக்கும் அடையாள அணிவகுப்பு நடத்தப்பட்டது என்றால் சரிதான். சங்கர்(எ) ஞானசேகர், சௌந்தர்ராஜன் இருவரையும் 01.05.2015 ம் தேதி காலை 5.30 மணிக்கு கைது செய்துள்ளனர் என்றால் எஸ்.எம்.ஆர் பெட்ரோல் பங்க் அருகே வைத்து கைது செய்துள்ளனர் என்றால் சரிதான்.

7) சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையில் சாட்சிகள் கிராம நிர்வாக அலுவலர், கிராம உதவியாளர் இருவரும் அங்கு வந்தார்கள் என்றால் தகவல் தெரிந்ததன் பேரில் வந்துள்ளார்கள். தகவல் யார் கொடுத்தார்கள் என்ற விவரம் ஆவணத்தில் இல்லை என்றால் ஆமாம். கைது செய்த பின்னிட்டு சங்கர் என்கிற ஞானசேகர் 01.05.2015 ம் தேதி காலை 6.00 மணிக்கு ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார் என்றால் சரிதான். எதிரி சௌந்தர்ராஜன் 01.05.2015 ம் தேதி காலை 07.30 மணிக்கு ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார் என்றால் சரிதான். அடைப்பு காவல் அறிக்கையில் கண்டுள்ள எதிரிகள் 1 முதல் 8 வரையுள்ள எதிரிகளை 02.05.2015 ம் தேதி அதிகாலை 2.30 மணிக்கு அடைப்பு காவலுக்கு அனுப்ப வேண்டி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர் என்றால் ஆவணங்களின் அடிப்படையில் சரிதான்.

8) அடைப்பு காவல் அறிக்கையில் மீதமுள்ள எதிரிகளான சிவா, கிருஷ்ணமூர்த்தி, இளையராஜா ஆகியோர்கள் தலைமறைவு எதிரிகளாக காண்பிக்கப்பட்டுள்ளார்கள் என்றால் அடைப்பு காவல் ஆவணத்தில் அவ்வாறு தான் உள்ளது. 01.05.2015 ம் தேதியிட்ட சிவா என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் கருமலைக்கூடல் காவல் நிலைய குற்ற எண்.267/2015 வழக்கில் பஸ்ஸ்டாப்பில் வைத்து 10.30 மணிக்கு கைது செய்ததாக ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ளது என்றால் ஆமாம்.

9) ஒரு அடையாள அணிவகுப்பு நடத்துவதற்கு முன்பாக அடையாளம் காட்டப்படும் உத்தேச எதிரி சிறையில் உள்ள போது அவருடைய புகைப்படத்தை அடையாளம் காட்டும் நபரிடம் காட்டக்கூடாது என்ற விதி உள்ளதா என்றால் சரிதான். அவ்வாறு அடையாளம் காட்டுவதற்கு முன்பாகவே அந்த நபரின்

புகைப்படத்தை அடையாளம் காட்டும் நபரிடம் காவல் ஆய்வாளர் காட்டினாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கருமலைக்கூடல் காவல் நிலைய குற்ற எண்.267/2015 என்ற வழக்கில் எதிரிகள் சிவா, கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் விடுதலை செய்யப்பட்டனர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரிகளின் புகைப்படத்தை காட்டி மத்திய சிறையில் அடையாள அணிவகுப்பு நடத்துவோம் என்று போலீசார் சொல்லி தான் அடையாளம் புகார்தாரர் காட்டினார் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Myilswamy Digitally signed by Myilswamy Date: 2026.03.11 17:53:31 +0530

**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**